FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213008

1. District : மாவட்டம் சென்னை PS: காவல்நிலையம் V XAC Year: ஆண்டு 2025 FIR No: முத.அ. எண் 5/AC/2025/CCI Date: நாள் 16.10.25

2. (i) Act சட்டம்: CSUI Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7

(iii) Act சட்டம்: ACt. 1988 (Amendment) Act 1988 Sections பிரிவுகள்: 106 BNSS

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : BNSS

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 15.10.25 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.45 to நேரம் வரை 21.00hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.10.25 Time : நேரம் 13.00

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.10.25 Time : நேரம் 14.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Collection of information.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Tamil Nadu Chief Electrical Inspector office, Guindy Chennai-32.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி 4km approximately North East.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜூலன் G. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M கணேசன்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 3.06.1982 (d) Nationality : தேசினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் வீட்டு தலைவி அலுவலர் சென்னை மாவட்டம்

(g) Address : முகவரி C/o தண்டையார் பேட்டை வீட்டு தலைவி அலுவலர்/திணை அயிது தூரும் அலுவலர் (பொறுப்பு) சென்னை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

A0-1. Tr. V. Ramakrishnan, Chief Electrical Inspector. Chief Electrical Inspector office, Guindy chennai-32.

A0-2 Tr. P. palani, Electrical Inspector of Technical Chief Electrical Inspector office, Guindy Chennai-3.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— Nil —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Nil —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Nil —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet is attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/10/2025

16/10/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 16.10.25 16.30 hrs

Name: பெயர் ..... K. Valarmathi
Rank: நிலை ..... Inspector of police

Contents of the FIR in V&AC continuation(Column -12 in Cr.No.5 /AC/2025/CC-I U/s 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS Continuous....)

காவல் ஆய்வாளர் திருமதி.K.வளர்மதி ஆகிய நான் இன்று 16.10.2025-ம் தேதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர சிறப்பு பிரிவு-1-ல் காலை சுமார் 11.00 மணிக்கு பொறுப்பில் இருந்த போது சென்னை தண்டையார்பேட்டை வட்ட கலால் அலுவலர்/துணை ஆய்வு குழும அலுவலர் (பொறுப்பு) திரு.க.ரமேஷ் அவர்கள்,அனுப்புனர் ரமேஷ், தண்டையார் பேட்டை வட்ட கலால் அலுவலர்/துணை ஆய்வு குழும அலுவலர் (பொறுப்பு) சென்னை-81.பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நகர சிறப்பு பிரிவு - 1 ஆலந்தூர், சென்னை-16ந.க. எண். ஆய்வு 328/2025 நாள் 16.10.2025 அம்மையீர்,சென்னை, கிண்டி, திரு.வி.க இன்டஸ்ரியல் எஸ்டேட் அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்தில் சென்னை-16, ஆலந்தூர், நகர சிறப்பு பிரிவு-1 காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய தாங்கள் குழுவினருடன் நான் இணைந்து மேற்கொண்ட திடீர் கூட்டுத் தணிக்கை 15.10.2025 அன்று பிற்பகல் 15.45 மணி முதல் இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது கணக்கில் வராத தொகை ரூ.1,92,590/- (ஒரு லட்சத்தது தொன்னூற்றுயிரண்டாயிரத்து ஐநூற்றி தொன்னூறு மட்டும்) கைப்பற்றப்பட்டது, அலுவலக ஆவணங்கள் மற்றும் நபர்களிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவை 15.10.2025 அன்று இரவு சுமார் 21:00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நகர சிறப்பு பிரிவு - 1 அவர்களிடம் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டது. இதன் தொடர் நடவடிக்கை குறித்து தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.தங்கள் நம்பிக்கைக்குரிய,Sd.XXXX (க.ரமேஷ்), தண்டையார் பேட்டை வட்ட கலால் அலுவலர்/ துணை ஆய்வு குழும அலுவலர் (பொறுப்பு) சென்னை மாவட்டம். திடீராய்வின் செயல்முறை விவரம் பின்வருமாறு.. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-1 மற்றும் சென்னை தண்டையார்பேட்டை வட்ட கலால் அலுவலர்/துணை ஆய்வு குழும

அலுவலர் (பொறுப்பு) இணைந்து அரசு தலைமை மின் ஆய்வு அலுவலகம், திரு.வி.க இன்டஸ்டிரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32 அலுவலகத்தில் நடத்திய இருதுறை கூட்டுத்தணிக்கை மகஜர்.சென்னை -32, கிண்டி, திரு.வி.க இன்டஸ்டிரியல் எஸ்டேட்டில் அமைந்துள்ள அரசு தலைமை மின் ஆய்வு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இடைதரகர்கள் மூலமாகவும், நேரடியாகவும் மின்தூக்கி நிறுவுதல் மற்றும் பராமரிப்பிற்கான உரிமம் வழங்குதல், உயர்/அதி உயரழுத்த மின் நிறுவனங்களுக்கான அனுமதி வழங்குதல் (HD /Solar/ Wind) சம்மந்தப்பட்ட பணிகளுக்கான இந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில், சென்னை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் பேரில் சென்னை தண்டையார்பேட்டை வட்ட கலால் அலுவலர்/துணை ஆய்வு குழும அலுவலர் (பொறுப்பு) திரு.க.ரமேஷ் என்பவர் மதியம் சுமார் 14.00 மணியளவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-1ல் ஆஜரானார். பின்னர் மதியம் சுமார் 15.15 மணியளவில் 1. திரு.G.ரமேஷ், வட்ட கலால் அலுவலர்/ துணை ஆய்வு குழும அலுவலர் (பொறுப்பு), தண்டையார்பேட்டை, சென்னை-81, 2. திருமதி R.ஷர்மு, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை 3. திரு.K.வளர்மதி, காவல் ஆய்வாளர் மற்றும் காவல் ஆளினர்கள் சகிதம் அரசு வாகனத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திலிருந்து புறப்பட்டு அரசு தலைமை மின் ஆய்வு அலுவலகத்திற்கு சுமார் 15.35 மணிக்கு வரப்பட்டது. பின்னர் சுமார் 15.45 தலைமை மின் ஆய்வு அலுவலகத்திற்கு வந்து திடீர் இருதுறை கூட்டு தணிக்கை மேற்க்கொள்ளப்பட்டது. அலுவலக வளாகத்தில் “இலஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம்” என்ற பலகை அலுவலகத்தில் இருந்தது. மேற்படி அலுவலகத்தின் பிரதான வாயில் கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தின் வரவேற்பு அறையின் வலது

பக்கத்தில் மின் ஆய்வு கூடம் அமைந்துள்ளது. தரை தளத்தில் இடது பக்கத்தில் முதல் மாடிக்கு செல்லும் படிகட்டுக்கள் இருந்தன. முதல் மாடியில் வடக்கு திசையில் வரவேற்பு அறை உள்ளது அதை ஒட்டி தலைமை மின் ஆய்வாளர் அறை அமைந்துள்ளது. தலைமை மின் ஆய்வாளர் அறை, வரவேற்பு அறை, நிர்வாக அலுவலர் அறை ஆகியவை சோதனை செய்யப்பட்டன. தலைமை மின் ஆய்வாளர் திரு இராமகிருஷ்ணன் அவர்கள் பணியில் இருந்தார். முதல் மாடியில் வரவேற்பு அறையின் தெற்கு பக்கம் முதுநிலை மின் ஆய்வாளர் அறை இருந்தது. முதல் மாடி வரவேற்பு அறையில் திரு.தனசேகர் என்பவர் இருந்தார். அவரிடம் ரூ30,000/- (60xRs.500) இருந்தது. மேற்படி பணத்தை எதற்காக எடுத்துவந்தீர்கள் என்று கேட்டற்கு அவர் கோயம்புத்தூரிலிருந்து வருவதாகவும், இந்த அலுவலகத்திற்கு தான் வேலை பார்க்கும் Excel Power Projects அலுவலகத்திற்கு Drawing Approval சம்மந்தமாக Technical பிரிவிற்கு வந்ததாக தெரிவித்தார். மேலும், அவர் வைத்திருந்த ரூ,30000/-க்கு எடுத்து வந்ததற்கான சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக, திரு உமையராஜ், தான் வேலை பார்க்கும் கோயம்புத்தூரில் உள்ள கிருஷ்ணா பாரதி எலக்ட்ரோசோல் பிரைவேட் லிமிடேட் என்ற நிறுவனத்திற்கு Rectification Certificate பெறவேண்டி இந்த அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். மேலும், அவரிடம் இருந்த ரூபாய் 10,000/- (20X500) -ற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக, திரு.ரூபன்பாபு, APEC Infra Projects and Trading LLPஎன்ற நிறுவனத்தில் Projects coordinator பணிபுரிவதாக தெரிவித்தார். தனது நிறுவனத்திற்கு Safety Certificate பெறுவதற்காக டெக்னிக்கல் பிரிவில் பணிபுரிவர்களை பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவரிடமிருந்த ரூபாய் 4000/- (8X500) -ற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச

பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது.திரு.ஜெய்குமார் கோவர்தனா பவர் கன்ரோல் அலுவலகத்தில் இன்ஜீனியராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தனது நிறுவனத்திற்கான Drawing Approval சம்மந்தமாக Technical பிரிவில் பணிபுரிவர்களை பார்க்கவந்ததாக தெரிவித்தார். அவரிடமிருந்த ரூபாய் 34,300/- (66X500, 13x100) -ற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது. திரு.அருண்குமார் தான் ஸ்ரீ சிவசக்தி இன்ஜினியரிங் நிறுவனத்தில் எலக்ட்ரிக்கல் இன்ஜீனியராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தனது நிறுவனத்திற்காக Solar Power Project-ற்காக தற்காலிகமாக இருந்த உரிமத்தை நிரந்தர உரிமம் பெறவேண்டி டெக்னிக்கல் பிரிவு அலுவலர்களை பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவரிடமிருந்த ரூபாய் 2000/- (4X500) -ற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது. திரு.S.ரவி, சென்னை R.G Electrical என்ற நிறுவனத்தின் Proprietor இருந்து வருவதாகவும் தனது நிறுவனத்தின் ஜெனரேட்டர் நற்சான்றிதழ் பெறவேண்டி தபாலில் கடிதம் கொடுக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடமிருந்த ரூ.3500/- (7X500) -ற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது. மேலும், பார்வையாளர்கள் அறையில் ஒரு கருப்புநிற பை ஒன்று இருந்தது அதனை யாரும் உரிமை கோரவில்லை. அதனை சோதனை செய்து பார்த்ததில் அலுவலக உறையில் இரண்டு கட்டுகளாக பணம் இருந்தது. பின்னர், சுமார் அறைமணி நேரம் கழித்து திரு A.சரவணன் என்பவர் தனக்கு சொந்தமானது என்று கூறினார். மேலும், தான் சென்னை மேடவாக்கத்தில் Pandies Energy என்ற நிறுவனத்தின் Site Supervisor-ஆக பணிபுரிந்து வருவதாகவும் தனது நிறுவனத்திற்கு Drawing Approval சம்பந்தமான தபால் கொடுக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் இருந்த ரூ 1,00,000/- (200X500) -ற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச பணமாக கருதப்பட்டு

கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.A.K, பைசல் உர் ரஹுமான் என்பவர் Tycoon Liaison என்ற நிறுவனத்தை நடத்தி வருவதாகவும் தனது நிறுவனத்திற்கு Safety Certificate பெறுவதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த ரூ.5000/- (10X500) -ற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் மேற்படி பணமானது லஞ்ச பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது. இவ்வாறாக பார்வையாளர் அறையில் அமர்ந்திருந்தவர்களை விசாரணை செய்து அவர்களிடமிருந்து மேற்படி பணத்தினை கைப்பற்றிய பின்னர் நீங்கள் அனைவரும் தலைமை மின் ஆய்வாளர் அவர்களை சந்தித்து லஞ்ச பணமாக கொடுக்க வந்துள்ளீர்களா என்று கேட்டதற்கு அனைவரும் எவ்வித பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தனர். மேலும், தமிழ்நாடு மின் உரிமம் வழங்கும் அலுவலகம் வடக்கு திசையை பார்த்தவாறு உள்ளது. அந்த அலுவலகத்தில் இடது புறம் Deputy secretary -ன் அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகத்தில் ஊதா நிற GRT Jewellers என்ற கைப்பையில் ரூ.3790/- (6x200, 20x100, 7x50, 12x20) இருந்தது. இதைபற்றி Deputy secretary திருமதி.ஹேமா அவர்களிடம் கேட்டபோது அவர் முதலில் தனக்கு சொந்தமான பணம் இல்லை என்று தெரிவித்தார். அதன்பின்னர், மீண்டும் விசாரணை செய்த போது தனது சொந்த தேவைக்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே, மேற்படி பணத்திற்கு சரியான காரணம் தெரிவிக்காததால் லஞ்ச பணமாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்டது. தமிழ்நாடு மின் உரிமம் வழங்கும் அலுவலகத்தில் அக்டோபர் மாதத்தின் வருகைப்பதிவேடு நகல் எடுக்கப்பட்டு உண்மை நகல் என சான்று பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

வ.எண்	விபரம்	மொத்த பக்கங்கள்
1)	வருகைபதிவேடு அக்டோபர் 2025-ம் ஆண்டிற்கான பணியாளர்களின் தினசரி வருகை பதிவேடு	7 தாள்கள்

2)	வருகைபதிவேடு அக்டோபர் 2025-ம் ஆண்டிற்கான உதவியாளர்களின் தினசரி வருகை பதிவேடு	6 தாள்கள்

இந்த இருதுறை கூட்டுத்தணிக்கையானது 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி இருதுறை கூட்டுத்தணிக்கையானது பொதுமக்களுக்கோ மற்றும் இம்மண்டல அலுவலக பணிகளுக்கோ எந்தவித பாதிப்பும் இன்றி நல்ல முறையில் முடிக்கப்பட்டது. ஓம் திரு.ரமேஷ், வட்ட கலால் அலுவலர், தண்டையார்பேட்டை, துணை ஆய்வு குழும அலுவலர், சென்னை-81, ஓம் R. ஷர்மு, காவல் துணை கண்காணிப்பாளர்,சென்னை நகர சிறப்புபிரிவு-1, ஊ.த.க துறை, சென்னை-16, ஓம். திரு.V.ராமகிருஷ்ணன், அரசு தலைமை மின் ஆய்வாளர், மின் ஆய்வுத்துறை, கிண்டி, சென்னை-32.ஓம் திரு.P.பழனி, மின் ஆய்வாளர்-தொழில்நுட்பம், மின் ஆய்வுத்துறை, கிண்டி, சென்னை-32. அய்யா மேற்படி அறிக்கையினை 16.10.2025-ம் தேதி 13.00 மணிக்கு பெற்ற அறிக்கையின் தன்மைக்கு ஏற்ப ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை Cr.No.5 /AC/2025/CC-I U/s 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன் படி 14.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.ஒப்பம் XXX (K.வளர்மதி) காவல் ஆய்வாளர், சென்னை நகர சிறப்புபிரிவு-1, ஊ.த.க துறை, சென்னை-16) இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, துணை ஆய்வு குழும அலுவலர் (பொறுப்பு) க.ரமேஷ் அவர்களின் கடித எண். ந.க.எண்.ஆய்வு/328/2025 நாள் 16.10.2025 அதன் இணைப்பு இரு துறை கூட்டு துறை மகஜர் ஆகியவைகளை Hon'ble Principal Judge, City Civil and Sessions Court, Chennai.அவர்களுக்கும் பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

16/10/25

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
City Special Unit-I MKN Road,
Alandur, Chennai - 600 016.
(Near St. Thomas Mount Metro Railway Station)